டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 11.10.2024 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 097 - Madurai | Online Edition

# ஒரு வாரத்திற்கு கனமழை நீடிக்கும்! சென்னை வானிலை மையம் தகவல்!

சென்னை, அக்.10

ஒரு வாரத்திற்கு தமிழ்நாட்டில் பரவலாக மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது என சென்னை வானிலை ஆய்வு மைய தென்மண்டல இயக்குநர் பாலச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய சென்னை வானிலை ஆய்வு மைய தென்மண்டல இயக்குநர் பாலச் சந்திரன், லட்சத்தீவு மற்றும் அதனை ஒட்டிய அரபிக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுபகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக மத்திய கிழக்கு அரபிக் கடல், கர்நாடகா– கோவா கடற்கரை பகுதிகளில் நீடிக்கிறது. தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதியில் அக்டோபர் 12 அன்று வளிமண்டல கீழடுக்கு சுழற்சி உருவாக வாய்ப்புள்ளது. ஆகவே அடுத்த ஒரு வாரத்திற்கு தமிழ்நாட்டில் பரவலாக மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. புதுச்சேரியிலும் அடுத்த 7 நாட்களுக்கு மழை நீடிக்கும்.

இன்று திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் 14 ஆம் தேதி சென்னை, காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது.

தமிழகத்தில் இன்று 15 மாவட்டங்களில் கனமழை பெய்யும். சென்னையில் ஒரு வாரத்திற்கு மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளது எனக் கூறினார்.



**விடுமுறை அறிவிப்பு**

இன்று (11.10.24) வெள்ளிக்கிழமை சரஸ்வதி பூஜை மற்றும் ஆயுத பூஜையை முன்னிட்டு அக்ரிடாக்டர்.இன் மின்னிதழ் அலுவலகத்திற்கு விடுமுறை.

எனவே அடுத்த மின்னிதழ் 13.10.24 ஞாயிற்றுக்கிழமை வெளிவரும்.

– நிர்வாகி

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# வணிக முறையிலான காய்கறி மற்றும் பழப்பொருட்கள் தயாரித்தல் பயிற்சி

கோவை, அக்.10

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 'வணிக முறையிலான காய்கறி மற்றும் பழப்பொருட்கள் தயாரித்தல்' பற்றிய பயிற்சி 16.10.24 மற்றும் 17.10.24 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.30 மணி முதல் மாலை5.00 மணி வரை நடைபெறும். கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- உலர வைக்கப்பட்டகாய்கறிகள் மற்றும் பழங்கள் (Dehydrated vegetables and fruits)
- பலவகை பழ ஜாம் (Mixed fruit jam)
- பழரசம் (Squash)
- தயார் நிலைபானம் (Ready - to - serve beverage)
- ஊறுகாய் (Pickles)
- ஊறுகனி (Candy)
- பழப்பார் (Fruit bar)
- தக்காளி கெட்சுப் (Tomato Ketch up)

இத்தொழில்நுட்பத்தில் ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770 (ரூ.1500 + GST 18%) பயிற்சி முதல் நாளன்று செலுத்தி தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளலாம்.

பயிற்சியானது, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், (பேருந்து நிறுத்தம் – வாயில் எண்.7, மருதமலைசாலை வழி) கோயம்புத்தூர்– 641003 நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641003, தொலைபேசி எண் : 94885 18268, 0422 6611268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

# பெருந்துறை வட்டாரத்தில் விவசாயிகள் மேளா



ஈரோடு, அக்.10

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டாரம் வேளாண்மை உழவர் நலத்துறை, மூலம் செயல்படுத்தப் படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் மடத்துப் பாளையம் வருவாய் கிராமத்தில் விவசாயிகள் மேளா 8.10.24 அன்று பெருந்துறை வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் க.பிரசாத் தலைமையில் நடைபெற்றது. மேலும் பேசுகையில் துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் வேளாண் கிடங்கில் இருப்பில் உள்ள உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டம் பெற விரும்பும் விவசாயிகள் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் பற்றி சிறப்புரையாற்றினார்.

இந்த மேளா–விற்கு மடத்துப்பாளையம் பஞ்சாயத்து தலைவர் ஹி.ஆண்டமுத்து முன்னிலை வகித்தனர். மேலும்,வேளாண் அலுவலர் நடமாடும் மண் பரிசோதனை நிலையம் சு.ஆனந்தி பேசுகையில், மண் மற்றும் நீர் மாதிரிசேகரிக்கும் முறை பற்றிய செயல் விளக்கமும் அவற்றை பயன்படுத்தும் முறை பற்றியும் எடுத்து கூறினார். தோட்டக்கலை உதவி இயக்குநர் வி.பிரியா பேசுகையில், தேனீ வளார்ப்பு மற்றும் மரக்கன்றுகள் விநியோகம் பற்றிய விவரங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் னு.நவீன் விவசாயிகளுக்கு துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் மானிய விபரங்கள் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் துணை வேளாண்மை அலுவலர் அருள் மொழி வர்மன் வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் மற்றும் மானிய விபரங்களை தெளிவாக விளக் கினார். இந்த விவசாயிகள் மேளாவில் வேளாண்மை துறை, நுண்ணீர் பாசனத் திட்டம், தோட்டக்கலைத் துறை சார்பாக கண்காட்சிகள் அமைக்கப்பட்டது. இந்த மேளாவிற்கான ஏற்படுகளை உதவி வேளாண்மை அலுவலர் கலைச்செல்வி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் தாமோதரன் மற்றும் விஸ்வநாதன் ஆகியோர்கள் அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


Stanes
BIO NEMATON
Bio Pesticide
Paecilomyces lilacinus
பயோ நெமட்டான்
பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?
பயன்படுத்துவீர்...
பயோ நெமட்டான்
"நூற்புழுக்களின் எதிரி"
இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.
அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com
84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948
திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935
வேலூர் : 91 93449 14938

# விதை கிராம குழு விவசாயிகளுக்கு புத்தூட்ட பயிற்சி

இராமநாதபுரம், அக்.10

இராமநாதபுரம் வட்டாரம் காருகுடி கிராமத்தில், கீழ் வைகை உபவடி நிலப்பகுதி, பாசன வேளாண்மை நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் விதை கிராம குழு விவசாயிகளுக்கு புத்தூட்ட பயிற்சி நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில் இராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (ம.தி) பாஸ்கரமணியன்,வேளாண்மை துணை இயக்குநர் (மா.தி) னி.லு.அமர்லால்,விதைச்சான்று மற்றும் உயிர்ம சான்றளிப்புத்துறை உதவி இயக்குநர் சிவகாமி, இராமநாதபுரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மா.கேபாலகிருஷ்ணன் உயிர் உரம் உற்பத்தி மையம் வேளாண்மை அலுவலர் அம்பேத்குமார், இராமநாதபுரம் வட்டார வேளாண்மை அலுவலர் தமிழ்ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். காருகுடி ஊராட்சி மன்ற தலைவி சித்ராதேவி கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

விவசாயிகள் தங்கள் கிராமத்தில் உள்ள விவசாயிகளின் விதை தேவையினை தாங்களாகவே பூர்த்தி செய்யும் பொருட்டு, விதை உற்பத்தி தொழில்நுட்ப நடைமுறைகளை கடைபிடித்து விதை உற்பத்தி செய்திட விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப் பட்டது. முக்கியமாக பயறு வகை பயிர்கள் 65-70 நாட்களில் தரமான விதைகள் உற்பத்தி செய்யலாம் எனத் தெரிவிக்கப் பட்டது.

தகுந்த விதை சேமிப்பு முறைகள் கையாள்வதன் மூலம் அடுத்த பருவத்தில் விதைப்பதற்கு விதைகள் பயன்படுத்த இயலும்.

பயிற்சியில் விவசாயிகளுக்கு விதை நேர்த்தி முறைகள், களைக்கட்டுப்பாடு மற்றும் உர நிர்வாகம் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. பயிற்சிக்கான விரிவான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் குணசேகரன் செய்திருந்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | 10.10.2024 | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 25 | 30 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 25 | 30 | 57 | உருளை (பிற) | 36 | 40 |
| 1B | கத்திரி(Nadu) | 40 | 44 | 57A | உருளை(ஊட்டி) | 60 | 65 |
| 2 | வெண்டை | 35 | 40 | 58 | மேரக்காய் | 20 | 26 |
| 3 | தக்காளி (நாடு) | 36 | 40 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 25 | 30 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 32 | 35 | 60 | கேரட் | 35 | 40 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 55 | 60 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 34 | 38 |
| 6 | புடலை | 22 | 26 | 62 | நூல்கோல் | 40 | 44 |
| 7 | பீர்க்கன் | 25 | 30 | 63 | டர்னிப் | 40 | 45 |
| 8 | சுரைக்காய் | 20 | 24 | 64 | மு.கோஸ் | 20 | 25 |
| 9 | பாகற்காய் | 30 | 34 | 65 | மு.கோஸ்(கலர்) | 30 | 35 |
| 10 | கொத்தவரை | 30 | 34 | 66 | காளிபிளவர் | 55 | 60 |
| 11 | பூசணி | 12 | 15 | 67 | பட்டாணி | 190 | 200 |
| 12 | அரசாணி | 15 | 18 | 68 | பூண்டு | 260 | 300 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 25 | 30 | 69 | இஞ்சி | 50 | 130 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 30 | 35 | 70 | புருக்கோலின் | 100 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 50 | 54 | 71 | பெண்னி பீன்ஸ் | 100 | 105 |
| 16 | பெ.வெங்காயம்(புதியது/பழையது) | 46 | 54 | 72 | குடமிளகாய் | 55 | 60 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 35 | 38 | 73 | ஊட்டி அவரை | 130 | 140 |
| 18 | பச்சை மொச்சை | 40 | 45 | 74 | பஜ்ஜி மிளகாய் | 30 | 35 |
| 19 | முருங்கை | 55 | 60 | 71A | | | |
| 20 | தேங்காய் | 47 | 51 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 75 | 80 | 75 | எலுமிச்சை | 110 | 120 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 35 | 40 |
| 28 | கறிவேப்பிலை | 45 | 48 | 79 | மாதுளை | 200 | 240 |
| 29 | கொத்தமல்லி | 35 | 40 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 130 | 200 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் | 100 | 150 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 40 | 75 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 55 | 60 |
| 40 | கோவக்காய் | 30 | 35 | 91 | பூவன் | 50 | 54 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 25 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 25 | 30 | 96 | நேந்திரன் | 30 | 35 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 25 | 28 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 64 | 101 | டிராகன் ப்ரூட் | 165 | 175 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 32 | 35 | | | | |

# கலைஞரின் அனைத்து கிராம வேளாண் ஒருங்கிணைந்த வளர்ச்சி திட்ட ராபி பருவ விவசாயிகள் பயிற்சி



சிவகங்கை, அக்.10

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டாரம் வேளாண்மைத் துறையின் கீழ் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் மூலம் 2024-2025-ம் ஆண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்தவேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டகோட்டையூர் கிராமத்தில் 8.10.24 அன்று விவசாயிகளுக்கு ராபி பருவ விவசாயிகள் பயிற்சி நடத்தப்பட்டது. இளையான்குடி வேளாண்மை உதவி இயக்குநர் தங்கபாண்டியன் வேளாண் விரிவாக் கமையத்தில் பணமில்லா பரிவர்த்தனை செயல்படுத்தபடுவதாக விவசாயி களுக்கு தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சியில் வேளாண்மை அலுவலர் சிவகங்கை ளுவடு நாகராஜன் விவசாயிகளுக்கு இயற்கையான உயிர் உரங்களை பயன்படுத்துவதன் மூலம் மண் வளம் பாதுகாப்ப தோடு இராசயன் உரங்களின் செலவை குறைத்து அதிக மகசூல் கிடைக்கும். மேலும் மண் மாதிரிகள் எடுப்பது எந்தந்த இடத்தில் மண் மாதிரிகள் எடுப்பது பற்றி எடுத்துக் கூறினார்.

இப்பயிற்சியில் இளையான்குடி வேளாண்மை அலுவலர் அழகர்ராஜா விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையங் களில் இடுபொருட்களை பெறும் போது தங்களது பங்களிப்பு தொகையை இ-செலான், கிரெடிட் கார்டு, டெபிட் கார்டு, ஒருங் கிணைந்த பணப்பரிவர்த்தனை (UPI) மூலம் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது. வேளாண் விரிவாக்க மைய பணியாளர்கள் பணமில்லா பரிவர்த்தனை முறையை செயல்படுத்துவதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டு விற்பனை இட கருவிகள் மூலம் பண் பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இளையான்குடி துணை வேளாண்மைஅலுவலர் நடேசகுமார் உயிர் உரகளான ரைசோபியம் உளுந்து மற்றும் பாசிப்பயறு போன்ற பயறு வகை தாவரங்கள் எண்ணெய் வித்து, நிலக்கடலை போன்ற பயிர்கள் காற்றில் உள்ள தழைச்சத்தை ரைசோபியம் என்னும் பாக்டீரியா செடிகளின் வேர்களில் வேர் முடிச்சில் சேகரிக்கப்படுகின்றன. வட்டார தொழில்நுட்ப மேலாளர்

கோகிலா உயிர் உரங்களின் பயன்பாடுகள் மற்றும் அட்மா திட்டத்தில் செயல்படுத்தி வரும் செயல்விளக்கம் உள் மற்றும் வெளிமாவட்ட அளவிலான பயிற்சிகள் மேலும் மண் புழு உரங்கள் பயன்பாடுகள் பற்றி எடுத்துக் கூறப்பட்டது. மேலும் உதவி வேளாண்மை அலுவலர் சோபனா நெல் பயிரில் வறட்சி காலங்களில் விதை முளைப்புதிறனை அதிகரிக்க (1 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு) பயன்படுத்தி விதைகடினமாக்குதல் செயல்விளக்கம் செய்து காண்பித்தார். பயிற்சிக்கான ஏற்பாடு களை உதவி தொழில்நுட்பமேலாளர் சதீஸ் செய்திருந்தார்.



# மதூர் கிராமத்தில் உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி

சேலம், அக்.10



சேலம் மாவட்டம், ஏற்காடு வட்டாரம், மதூர் கிராமம் வேளாண்மை துறையின் கீழ் ஆத்மா திட்டத்தில் உள் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி ஆத்மா திட்ட சேர்மன் தங்கசாமி தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சி நோக்கம் எவ்வாறு கரிம வேளாண்மையில் சிறுதானிய சாகுபடி முறை பற்றி விரிவான விளக்கத்துடன் எடுத்துரைக்கப்பட்டது. இப்பயிற்சியில் வேளாண்மை உதவி அலுவலர் ராஜவேலு, கலந்து கொண்டு வேளாண்மை துறையில் செயல்படும் அனைத்து திட்டங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். வேளாண்மை பொறியாளர் கோபால், பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு வேளாண்மை பொறியியல் துறை சார்ந்த நடப்பு ஆண்டில் இருக்கும் அனைத்து திட்டங்கள் பற்றியும் விரிவான விளக்கத்துடன் எடுத்துரைத்தார். MN என் ஜி ஓ வை சேர்ந்த வெங்கடாசலம் கரிம வேளாண்மையில் சிறுதானிய சாகுபடி முறை அதன் பயன்பாடு சிறுதானியதால் ஏற்படும் நன்மைகள் மற்றும் இயற்கை விவசாயம் எவ்வாறு மேற்கொள்வது பயிர்சுழற்சி முறை இயற்கை வேளாண்மையில் விளைந்த பொருள்கள் சந்தைப்படுத்தும் முறை என்பதனை விரிவாக விளக்கினார்.

மேலும் வட்டார தொழில்நுட்ப ரோபனா, ஆத்மா திட்டத்தை பற்றியும் இப்பயிற்சியின் நோக்கம் பற்றியும் எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு தொழில்நுட்ப கையேடு மதிய உணவு மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. பயிற்சியில் Pico Projector பயன்படுத்தி இதன் வாயிலாக குறும்படம் மூலம் விவசாயிகளுக்கு தொழில் நுட்பங்கள் காணொளி காட்சிப்படுத்தப்பட்டது. பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில் மேலாளர் துரையரசு மற்றும் அருண்குமார் ஆகியோர் செய்து இருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நெல்லில் தண்டு துளைப்பான் (குருத்துப்பூச்சி) அறிகுறிகள் மற்றும் கட்டுப்பாடு

தொடர்ந்து பெய்து வரும் மழையால், பயிர்களில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ள நிலையில், நெல்லில் தண்டு துளைப்பான் அறிகுறிகள் மற்றும் கட்டுப்பாட்டு முறைகளை காணலாம்.

**அறிகுறிகள்**

- இலையின் நுனியில் பழுப்பு நிற முட்டைக் குவியல் காணப்படும். வயல்களில் வெளிர் மஞ்சள்நிற சிறிய அந்துப் பூச்சிகள் பறப்பதை பார்க்கலாம்.

- வளர்ச்சிப்பருவத்தில் புழுக்கள் தண்டுகளில் நுழைந்து தண்டுகளை உட்கொள்வதால் அதன் நடுப்பகுதி காய்ந்து விடுகிறது. இதுவே 'நடுக்குருத்து காய்தல்' (Dea Heart) எனப்படுகிறது.

- குருத்தைப் பிடித்து இழுக்கும் போது அவை எளிதாக கையோடு வந்துவிடும்.

- நன்கு வளர்ச்சியடைந்த கதிர் வந்த பயிரில் முழு தானியக் கதிர்களும் காய்ந்து 'வெண்கதிர்' (White Ear) போல காட்சியளிக்கும் எனப்படுகிறது.

- பொருளாதார சேதநிலை அளவு : 2 முட்டை குவியல்/சதுர மீட்டர் (அ) 10% குருத்து காய்தல் (பயிர் வளர்ச்சிப் பருவத்தில்) (அ) 2% வெண்கதிர் (பூக்கும் பருவத்தில்).

**கட்டுப்பாடு**

- நாற்று நடுவதற்கு முன் அதிலுள்ள முட்டைக் குவியல் களை அகற்றுவதற்காக நாற்றுக்களின் நுனிப்பகுதியை கத்திரித்து முட்டைக்குவியல்களை அழிக்க வேண்டும். நாற்றுக் களை நெருக்கமாக நடுதலைத் தவிர்க்க வேண்டும்.

- வயலில் ஒரு ஏக்கருக்கு 25 இடங்களில் தென்னை மட்டையின் அடிபாகத்தை வெட்டி பறவைகள் அமர இருக்கை போல் ஊன்றி வைத்திட வேண்டும்.

- முட்டை ஒட்டுண்ணிகளான டிரைக்கோகரம்மா ஜப்பானிக் கம் @ 1,00,000/எக்டருக்கு (நடவுக்குப்பின் 37 நாட்கள் கழித்து ஒரு வார இடைவெளியில் 3 முறை வயலில் விடவும்).

● உயிரியல் கட்டுபாட்டுக் காரணியான பேசிலஸ் துரிஞ்சியன் சிஸ்வார்.குர்ஸ்டாகி @ 1.5 கிலோ/ எக்டருக்கு என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

● இயற்கை எதிரிகளான குளவி, பிரக்கோனிடே, சிலந்தி, பாச்சை ஆகியவை அதிக எண்ணிக்கையில் இருக்க வேண்டும்.

● இனக்கவர்ச்சிப் பொறி @ 10-12/எக்டர் வைத்து அந்துப் பூச்சிகளை கட்டுப்படுத்தலாம்

● பொருளாதார சேதநிலையை தாண்டும் பொழுது பின் வரும் ஏதேனும் ஒரு பூச்சிக்கொல்லியை தெளிக்கவும் (ஒரு ஹெக்டேருக்கு)

● அசிபேட் (75% SP) 670-1000 கிராம்
● அசாடிராக்டின் (0.03%) 1000 மி.லி
● கார்போசல்பான் (25% EC) 800-1000 மி.லி
● கார்டேப் ஹைட்ரோகுளோரைட் (50% SP) 1 கி.கி
● குளோரன்ட்ரானிலிப்ரோல் (0.4% G) 10 கி.கி
● குளோரன்ட்ரானிலிப்ரோல் (18.5% SC) 150 மி.லி
● குளோர்பைரிபாஸ் (20% EC) 1.25 லி
● பிப்ரோனில் (5% SC) 1000-1500 கிராம்
● பிப்ரோனில் (80% WG) 50-62.5 கிராம்
● புளுபெண்டிமைட் (20% WG) 125 கிராம்
● புளுபெண்டிமைட் (39.35% SC) 50 கிராம் தெளித்து பயன் பெறலாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கேட்டுக் கொண்டுள்ளார்.



# வேளாண் பொறியியல் துறை வழங்கும் விவசாயிகளுக்கான மானிய திட்டங்கள் தெரியுமா?

வேளாண்மை துறையின் சகோதர துறையான வேளாண்மை பொறியியல் துறை தமிழகத்திலுள்ள அனைத்து வட்டாரத்திலும் உதவி வேளாண் பொறியாளர் தலைமையில் செயல்படுகிறது. பலருக்கும் அந்த துறையின் செயல்பாடுகள் நலத்திட்டங்கள் மானியங்கள் குறித்து, தெரிந்து இருந்தாலும்கூட சிலருக்கு தெரியாத நிலை தான். அவர்களுக்காகவே இந்த பதிவு.

தற்போது விவசாயத்தில் முழுக்க முழுக்க இயந்திரமயமாக்கப் பட்ட நிலையில் அந்த துறையின் செயல்பாடுகளையும் தெரிந்து வட்டார அளவில் அவர்களை அணுகி விவசாயிகள் பயன்பெற வேண்டும்.

தற்போதைய சில நடைமுறையிலுள்ள திட்டங்களை பார்ப்போம்.

**1) கைபேசியால் இயங்கும் தானியங்கி பம்பு செட் கட்டுப்படுத்தும் கருவி (AUTAMATIC MOBIL SWICH)**

பொதுவாக கிராமபுறங்களில் பகல் நேரங்களில் மும்முனை மின்சாரம் சரிவர கிடைக்காத காரணத்தால் இரவு நேரங்களில், வயலுக்கு சென்று மோட்டரை இயக்கி நீர்ப்பாசன வசதி செய்ய வேண்டிய சூழ்நிலைகள் அதிகமாக உள்ளது. அதுவும் இரவு நேரங்களிலும், மழைக்காலங்களிலும் வயலுக்கு சென்று நீர்ப் பாசன செய்ய செல்லும்போது, பாம்பு கடி, விப்பூச்சி கடி, உள்ளிட்ட பலபிரச்சனைகளால் விவசாயிகள் சிக்க நேரிடுகிறது.

இதைத் தவிர்க்க தங்களுடைய வீட்டில் இருந்து கொண்டே பம்பு செட்டை இயக்கவோ, நிறுத்தவோ முடியும் வகையில் அவர்களது செல் போனில் (AUTAMATIC SWICHT / ON/OFF) செயல்படுத்த முடியும். இதற்கு கூடுதலான செலவாகும்.

இந்த செலவினத்திற்கு மானியமாக விவசாயிகளுக்கு, குறிப்பாக ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகள், சிறு/ குறு விவசாயிகள் மற்றும் பெண் விவசாயிகளுக்கு, மொத்த செலவில் 50% அல்லது அதிகபட்சமாக 7000/- மானியமாக வழங்கப்படுகிறது.

மற்ற விவசாயிகளுக்கு, மொத்த செலவில் 40% அல்லது அதிகபட்சமாக 5000/- மானியமாக வழங்கப்படுகிறது.

**2) புதிய மின் மோட்டார் வாங்கிட மானியம்**

பொதுவாக கிராமப்புறங்களில் கிணறுகளில் பழைய மின் மோட்டார்கள் தான் அதிகமாக உள்ளது. இதனால் நீர் இழுப்பு சக்தி குறைவாகவும் மின்சார செலவும் கூடுதலான விரயம் ஏற்படுகிறது. இதை தடுக்க மின் மோட்டாரை மாற்ற வேண்டியது அவசியமாகும். எனவே தமிழக அரசு வேளாண் பொறியியல் துறை வாயிலாக, புதிய மின்மோட்டரை வாங்கிட விரும்பும் சிறு / குறு விவசாயி களுக்கு ரூ.15000 மானியமாக வழங்கப்படுகிறது. இதில் 50% அல்லது அவற்றில் எது குறைவோ அது மானியத் தொகையாக வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3) தரிசு நிலங்களில் சிறுதானிய சாகுபடி செய்ய உழவு மானியம்**

தரிசாக போடபட்ட நிலங்களை சாகுபடிக்கு கொண்டு வருவதில் தமிழக அரசு மும்முரமாக செயல்படுகிறது. அந்த வகையில் நீண்ட நாட்களாக சாகுபடி செய்யப்படாத (முள், சீமை கருவேல்)




போன்ற நிலங்களில் அவற்றை அகற்றி, சாகுபடிக்கான நிலமாக மாற்றி அவற்றில் சிறுதானியங்களை (வரகு, கம்பு, திணை, ராகி, குதிரைவாலி) சாகுபடி செய்தால் அவற்றிற்கான உழவு மானியம் ஹெக்டேருக்கு 5400/- வழங்கப்படுகிறது.

மேலும் சூரிய மின்வேலி, வேளாண் வாடகை மையம் அமைக்கவும், குறைந்த வாடகையில் உழவு கருவிகள் போன்ற வற்றையும் விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் துறை மூலமாக கிடைக்கிறது என்பதே நாம் அறிந்த செய்தியாகும்.

தங்களுடைய தேவைக்கேற்ப விவசாயிகள் அவர்களை அணுகி பயன்பெற வேண்டுகிறோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# தலைக் கவசம் உயிர்க் கவசம்


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

## வேளாண் அறிவியல் நிலைய பொன்விழா

# ஆந்திராவில் இருந்து தொடரோட்டமாக திருச்சி வந்த ஜோதி



திருச்சி, அக்.10

வேளாண்மை அறிவியல் நிலைய பொன் விழாவையொட்டி ஜோதி தொடரோட்டம் நடைபெற்று வருகிறது. இந்தியாவில் முதன் முதலாக 1974ஆம் ஆண்டு வேளாண் அறிவியல் நிலையம் புதுச்சேரியில் தொடங்கப்பட்டது. தற்போது இந்தியா முழுவதும் 731 வேளாண் அறிவியல் நிலையங்கள் உள்ளன. இதில் தமிழ்நாட்டில் 33 வேளாண் அறிவியல் நிலை யங்கள் இயங்கி வருகின்றன. வேளாண் அறிவியல் நிலையம் தொடங்கப்பட்டு 50வது ஆண்டு விழா இந்தியா முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த நிகழ்வை கொண்டாடும் விதமாக, தமிழ்நாட்டில் முதலாவதாக தொடங்கப்பட்டதும், இந்திய அளவில் இரண்டாவதுமான திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகமணியில் அமைந்துள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 14.10.24 அன்று சிறப்பு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட உள்ளது. அதுசமயம், வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானிகள், வேளாண் துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள உள்ளனர். மேலும், மாடித் தோட்டம் மற்றும் வீட்டுகாய்கறி தோட்டம் பற்றிய பயிற்சி மற்றும் மரம் நடுதல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளன. இந்நிகழ்ச்சியில் நமது வீட்டில் காய்கறி தோட்டம் அமைத்து நமக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களுடன் பல தரப்பட்ட மருத்துவ குணங்களைக் கொண்ட காய்கறிகளை நாமே உற்பத்தி செய்யும் விதமாக மாடித்தோட்டம் மற்றும் வீட்டு காய்கறி தோட்டம் அமைத்தல் பற்றிய தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்பட உள்ளது. மேலும் தாய்க்காக ஒரு மரம் இயக்கத்தின் ஒரு பகுதியாக மரம் நடுதல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட உள்ளது.

மேலும் தூய்மை பாரத இயக்கத்தின் மூலம் பள்ளி சிறுவர்களுக்கு நடத்தப்பட்ட போட்டிகளின் அடிப்படையில் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட உள்ளது. வேளாண்மை அறிவியல் நிலையம் துவங்கி 50 ஆண்டுகள் நிறைவடைந்ததை கொண்டாடும் விதமாக பொன்விழா ஆண்டு ஜோதி தொடரோட்டம் ஆந்திர மாநிலம் விஜயநகரத்தில் ஆரம்பித்து 71 வேளாண் அறிவியல் நிலையங்கள் கடந்து நவம்பர் 12ஆம் தேதி புதுச்சேரியில் முடிவடைகிறது. இந்த ஜோதி தொடரோட்டம் திருப்பூர் வேளாண்மை அறிவியல் நிலையத்திலிருந்து 10.10.24 அன்று சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இதை மாவட்ட எல்லையில் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய இணைப் பேராசிரியர்கள் முனைவர்கள் சு.ஈஸ்வரன், எம்.மாரிமுத்து ஆகியோர் திருப்பூர் வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானியிடமிருந்து பெற்றுக் கொண்டனர். பின்னர், இந்த ஜோதி தொடரோட்டம் 15.10.24 அன்று கரூர் வேளாண்மை அறிவியல் நிலையத்திற்கு எடுத்துச் செல்ல உள்ளது. எனவே திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு வேளாண்மை அறிவியல் நிலையம் சார்பில், திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு தெரிவித்தார்.




# சொரப்பூர் கிராமத்தில் வயல் விழா நடைபெற்றது



விழுப்புரம், அக்.10

விழுப்புரம் மாவட்டம் கண்ட மங்கலம் வட்டாரம் சொரப்பூர் கிராமத்தில் வேளாண்மை துறை வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டத்தின் மூலம் வயல் விழா

நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவிற்கு ஊராட்சி மன்ற தலைவர் விமலா ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். முன்னோடி விவசாயி நடராஜன் முன்னிலை வகித்தார். வேளாண்மை அறிவியல் நிலையம் திண்டிவனம் பேராசிரியர் கணபதி, நெற்பயிரை பாதிக்கக்கூடிய பூச்சி மற்றும் நோய் தாக்குதலுக்கு






இயற்கை வழியில் மேலாண்மை முறையும் எலி ஒழிப்பு மேலாண்மை நெல் வயலில் பச்சை பாசி இடுவது குறித்து விளக்கி கூறினார். துணை வேளாண்மை அலுவலர் சுப்புராஜ் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் பயிர் காப்பீட்டு திட்டம் வேளாண்மை விரிவாக்க மையங்களில் மானிய விலையில் வழங்கப்படும் இடுப்பொருள்கள் பற்றி விளக்கி கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் தேன்மொழி, விவசாயிகளை வரவேற்று அட்மா திட்டம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் வீரமணி நன்றி உரை கூறினார். வயல் விழா–விற்கான ஏற்பாடுகளை அருள்பாபு செய்திருந்தார். நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# நெற்பயிரில் ஊட்டச்சத்து குறைபாடு நிவர்த்தி முறைகள்

**ஊட்டச்சத்து**

பயிர்களின் வளர்ச்சியையும் மகசூலையும் பல காரணிகள் நிர்ணயிக்கின்றன. அவற்றில் மிக முக்கியமானது உர மேலாண்மை, மண்ணை ஊட்டச்சத்துகளின் கிடங்கு எனக் கூறலாம்.

பெரும்பாலும் ஊட்டச்சத்துகள் மண்ணிலுள்ள தனிமங் களிலிருந்தும், மண்ணில் இடப்படும் உரம் வாயிலாகவும், அங்ககப் பொருட்கள் மற்றும் நுண்ணுயிர்கள் வாயிலாகவும், பயிர்களுக்கு கிடைக்கின்றன. ஊட்டச்சத்துக்களின் பற்றாக் குறையானது பயிர்களின் வளர்ச்சியின் பல்வேறு செயல் பாட்டினை பாதித்து மகசூலை பாதிக்கின்றன. அதிலும் முக்கியமாக நுண்ணுட்டச்சத்துகளை பொறுத்த வரை அவற்றின் பற்றாக்குறை பயிரின் உணவு தயாரிக்கும் தொழிற்சாலையான இலைகளை கடுமையாக பாதிதது சிதர வைத்து செயல்பாடு களையும் ஸ்தம்பிக்க வைத்து விடுகின்றன.

● தழைச்சத்து பற்றாக்குறை செடியின் கீழ் இலைகள் மஞ்சள் நிறத்துடனும் பொதுவாக வளர்ச்சி குன்றியும் காணப்படும். பற்றாக்குறை மிகவும் தீவிரமான நிலையில் இலைகள் பழுப்பு நிறமாக மாறி மடிந்து விடும். பற்றாக்குறையின் அறிகுறி இலையின் நுனியில் தோன்றி இலையின் நடு நரம்புவரை பரவி, இறுதியில் இலை மடிந்து விடும். 10 கிராம் யூரியாவை 1 லிட்டர் நீரில் கரைத்து 10 நாள் இடைவெளியில் அறிகுறிகள் மறையும் வரை தெளிக்க வேண்டும்.

● மணிச்சத்து பற்றாக்குறை பயிர்கள் வளர்ச்சி குன்றி யிருக்கும் தூர் கட்டுதல் குறைந்துவிடும். இலைகள் கரும் பச்சை நிறமாக மாறி நெட்டுக்குத்தாக இருக்கும் மணிப்பிடித்தல் குன்றி விடும். 2 கிலோ கிராம் DAP 20 லிட்டர் தண்ணீரில் இரவு முழு வதும் ஊற வைத்து மறுநாள் நன்கு கலக்கி, பின் காலையில் மேலாக வடித்து பயிர்கள் மீது 1 லிட்டர் கரைசலை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து 20 டேங் ஒரு ஏக்கருக்கு 10 நாட்கள் இடைவெளியில் இருமுறை தெளிக்க வேண்டும்.

● சாம்பல் சத்து பற்றாக்குறை புது இலையில் நீலம் கலந்த பசுமை நிறத்திலும், முதிர்ந்த இலைகள் முறையற்றும் மஞ்சள் தேமலுடனும் திட்டுத்திட்டாக கருகியும் காணப்படும். கதிர் முதிர்வது

குறைந்தும் காணப்படும். தண்டு பலவீனமடைந்து சாய்ந்தும் விடலாம். 10 கிராம் பொட்டாசியம் குளோரைடை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நாட்கள் இடை வெளியில் அறிகுறிகள் மறையும் வரை தெளிக்க வேண்டும்.


● மக்னீசியம், பற்றாக்குறை இலைகள் மஞ்சள் தேமலுடன் நுனியில் வெள்ளை புள்ளியுடன் காணப்படும். 5 கிராம் மெக்னீசியம் சல்பேட்டை ஒரு லிட்டர் நீரில் கரைத்து பூக்கும் மற்றும் மணி பிடிக்கும் பருவங்களில் அறிகுறிகள் மறையும் வரை தெளிக்க வேண்டும்.

● துத்தநாக குறைபாடு அடியிலைகளின் அடிப்பாகத்தில் மஞ்சள் தேமல் குறி தென்படும். சிவப்பு கலந்த பழுப்பு நிறம் கீழ் இலைகளில் காணப்படும். மண்ணில் அடியுரமாக ஏக்கருக்கு 10 கிலோ துத்தநாக சல்பேட் இட வேண்டும்.

● இரும்பு குறைபாடு இளம் இலைகளில் இலையிடை நரம்பு பகுதி மஞ்சள் ஆகுதல், மொத்த இலைகள் மற்றும் இளம் இலைகளில் பசுமை சோகை ஏற்படுதல் மற்றும் முழு பயிர் செடியும் சோகை ஏற்பட்டு மஞ்சள் ஆகுதல்.

எனவே ஏக்கருக்கு இரும்பு சல்பேட் 500 கிராம் 100 லிட்டர் தண்ணீரில் கலந்து இருமுறை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

யூரியாவுக்கு பதிலாக அம்மோனியம் சல்பேட் உரத்தினைப் பயன்படுத்த வேண்டும்.



● தாமிரச் சத்து குறைபாடு இலைகளில் பச்சை சோகை நடு நரம்பு தவிர அனைத்து பகுதியிலும் பரவும். அதன்பின் இலை நுனிகளில் செம்பழுப்பு சிதைவுப் புள்ளிகள் காணப்படும். புதியதாக உருவாகும் இலைகள் சுருண்டு காணப்படும். தழை தெளிப்பான் 200 கிராம் காப்பர் சல்பேட்டை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து இருமுறை 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

சிபாரிசு செய்யப்பட்ட நெல் நுண்ணூட்ட கலவையை பயன்படுத்தியும் நுண்ணூட்ட சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்யலாம். ஏக்கருக்கு 2 கிலோ நுண்ணூட்ட கலவையை 200 லிட்டர் நீரில் கலந்து இலைகளில் தெளிக்க வேண்டும். 15 நாட்கள் கழித்து மீண்டும் தெளிக்கவும்.

இவ்வாறு ஊட்டச் சத்துகளின் குறைபாடு அறிந்து உரிய காலத்தில் நிவர்த்தி செய்து மகசூலை பெருக்க வேண்டும் என இராமநாதபுரம் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் சிவகாமி கூறியுள்ளார்.



# அட்மா திட்ட விவசாயிகள் ஆலோசனைக் குழு கூட்டம் நடந்தது

கிருஷ்ணகிரி, அக்.10

கிருஷ்ணகிரி வட்டாரத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் வட்டார தொழில்நுட்ப குழு மற்றும் வட்டார விவசாயிகள் ஆலோசனைக்குழு கூட்டம் நடைப்பெற்றது. அது சமயம் கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண்மை அலுவலர், உழவர் பயிற்சி நிலையம் கிருஷ்ணகிரி ம.சுருதி, தலைமை தாங்கி சிறப்புரை ஆற்றி உழவர் பயிற்சி நிலையம், அட்மா திட்ட செயல்பாடுகள் பிற துறைகள் பயிற்சி நடத்துதல் பற்றியும் விளக்கி கூறினார். வேளாண்மை உதவி இயக்குநர், (பொ) சி.சு.ரூபசந்தர், இக்குழு கூட்டத்திற்கு முன்னிலை வகித்தார். விவசாயிகளின் கருத்துகளை கேட்டு நேரடி விளக்கம் அளித்தார். மக்காசோளம் பயிர்களில் புதிய தொழில் நுட்பங்கள், சாகுபடி செய்வதன் முக்கியதுவம் குறித்தும் விளக்கம் அளித்தார். ந.சசிகலா, உதவி ஆய்வாளர், பட்டு வளர்ச்சித் துறை, பட்டு வளர்ப்பு முறைகள் பராமரிப்பு அவற்றன் பயன்களை விவசாயி களுக்கு விளக்கி கூறினார்.

சௌமியா ரவி, தோட்டக்கலை அலுவலர் கிருஷ்ணகிரி, தோட்டக்கலைத் துறையின் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் பற்றி விளக்கம் அளித்தார். பொ.விஜயகுமார், உதவி வேளாண்மை அலுவலர் (வே.வ.) வேளாண் வணிகம் சந்தைபடுத்துதல் உழவர் சந்தை குறித்து அவற்றின் பயன்களை விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். பார்வதி, விவசாயிகள் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் மற்றும் இதர துறை அலுவலர்களை வரவேற்று குழு கூட்டத்தை தொடங்கி வைத்தார்.

இக்குழு கூட்டத்தில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங் கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டதின் பயன்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து கூறப்பட்டது. மேலும் அட்மா திட்டத்தின் செயல்பாடுகள், மற்றும் திட்ட நோக்கம் திட்டத்தின் வாயிலாக விவசாயிகளுக்கு சென்றடையும் தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி பட்டறிவு பயணம், செயல்விளக்கங்கள் போன்ற திட்ட பணிகள் குறித்து விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது. இக்குழு கூட்டத்தில் உதவி தொழில்நுட்ப மேலாளர் பூ.சன்முகம், வட்டார ஆலோசனை குழு உறுப்பிணர்களுக்கு அட்மா திட்ட பணிகள் மற்றும் விவரங்கள் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அவற்றின் செயல்பாடுகள் குறித்தும், விளக்கம் அளித்தார். எலிசபெத்மேரி, வேளாண்மைஅலுவலர் நன்றி கூறினார்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# கிசான் கோஸ்திஸ் - கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி



சிவகங்கை, அக்.10

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டாரத்தில் வேளாண்மைத் துறை விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் கிசான் கோஸ்திஸ் –விவசாயிகள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி சிறுகுடி கிராமத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறுகுடி விவசாய பெருமக்கள் அனைவரும் கலந்து காண்டனர். இக்கூட்டத்தில் விவசாய பெருமக்கள் விளம்பர பாதாகைகள் மூலம் வேளாண் தொழில்நுட்பங்கள் பற்றி பேரணி நடத்த பெற்றது.

இக்கூட்டத்திற்கு தலைமை வகித்து சிவகங்கை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி நிலையம்) ந.சண்முகஜெயந்தி, தலைமையேற்று கூட்ட பேரணி மற்றும் கண்காட்சியினை துவக்கி வைத்து உரையாற்றினார்.

மானாமதுரை வேளாண்மை உதவி இயக்குநர் ஜா.இரவிசங்கர், முன்னிலை வகித்து விவசாயிகளுக்கு வேளாண்மை சார்ந்த திட்டங்களான முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம், மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்கள், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், ஒரு கிராமம் ஒரு பயிர் திட்டங்களை விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார்.

சிறுகுடி ஊராட்சிமன்ற தலைவர் பஞ்சவர்ணம் வாழ்த்துரை வழங்கினார்கள். தோட்டக்கலை உதவி இயக்குநர் சுகன்யா, தோட்டக்கலை துறையில் உள்ள திட்டங்களான சொட்டுநீர் பாசனம் அமைத்தல், நிரந்தர பந்தல் காய்கறி சாகுபடி ஊக்குவிப்பு, பசுமைகுடில் அமைத்தல் போன்ற ட்டங்களை எடுத்து கூறினார்கள்.

இப்பயிற்சியில் உயி ர்உர உற்பத்தி மைய வேளாண்மை அலுவலர் கருணாநிதி, சமச்சீர் உரமிடல் மற்றும் இரசாயன உரங்கள் பயன்பாட்டினை குறைத்தல் குறித்த தொழில் நுட்பங் களான அனைத்து பயிர்களுக்கும் ஒருங்கிணைந்த முறையில் சமச்சீர் உரமிடல் பற்றியும் இயற்கையான முறையில் பயிர்களுக்கு எவ்வாறு உரமிடதல் பற்றியும் பசுந்தாள் உரங்கள் விதை முதல் அறுவடை வரை உள்ள தொழில்நுட்பங்கள் பற்றியும் மற்றும் பசுந்தழை உரங்கள் வயலில் இடுவதால் இயற்கையான முறையில் பயிர் சாகுபடி செய்வதையும், இலை வண்ண அட்டையை பயன் படுத்தி உரம் இடுவதையும், உயிர் உரங்கள் பயன்படுத்துவதால்

ஏற்படும் நன்மைகள் பற்றியும், கரிம உரங்கள் மற்றும் மண்புழு உரங்கள் தயாரிக்கும் முறைகள் மற்றும் பூசாகேப்சூல் ,வேஸ்ட்டீ கம்போஸ்ட் தாயரிக்கும் முறைகள் மற்றும் பயன்பாடுகள் பற்றியும் பேரூட்ட சத்துகள் மற்றும் நுண்ணூட்ட சத்துகள் இயற்கையான முறையில் இடுவதைபற்றியும் எடுத்து கூறினார்.

வேளாண் பொறியியல் துறை உதவி பொறியாளர் சுந்தர பாண்டியன் வேளாண்மை பொறியியல் துறையில் உள்ள திட்டங்களான வேளாண்மை இயந்திரமயமாக்குதல் திட்டத்தில் 40-50 சதவீதம் பவர் டில்லர் மற்றும் பவர் வீடர் மானியம் மற்றும் உழவர் வாடகை திட்டத்தின் மூலம் டிராக்டர் ரூ.500/- மணிக்கு இ வாடகை செயலி பயன்படுத்தி பெறலாம் என்றும் மற்றும் இதர திட்டங்களை எடுத்து கூறினார். கால்நடை துறையில் கால்நடை உதவி மருத்துவர் உமாபாரதி கால்நடை துறையில் உள்ள திட்டங்களான 50 சதவீதம் மானியத்தில் தீவன வெட்டும் கருவி, தேசிய செயற்கை முறை கருவுட்டல் திட்டத்தை பற்றியும் மற்றும் 40 எண்கள் நாட்டுக்கோழி குஞ்சு வழங்கும் திட்டம் மற்றும் இதர திட்டங்களை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

மானாமதுரை துணை வேளாண்மை அலுவலர் சப்பாணிமுத்து வேளாண்மைத் துறையில் செயல்படுத்தி கொண்டிருக்கும் திட்டங்கள் பற்றியும், திட்டங்களின் பயன்பாடுகள், வழிகாட்டு நெறிமுறைகள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். உதவி வேளாண்மைஅலுவலர் ரம்யா வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறையில் உள்ள திட்டங்களை விரிவாக விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். மானாமதுரை வட்டார தொழில்நுட்ப மேலாளர் அமிர்தலட்சுமி அட்மா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் விவசாயிகள் பயிற்சிகள் சம்பந்தமான உள் மற்றும் வெளிமாநில, மாவட்ட அளவிலான பட்டறிவு, கண்டுணர்வு பயிற்சிகள் செயல் விளக்கத்திடல்கள் அமைத்தல் தொடர்பாக திட்டங்களை பற்றி விவசாயிகளுக்கு விரிவான முறையில் எடுத்துக் கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் தினேஷ் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் வினோத்குமார் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந் தனர். நுண்ணீர் பாசனம் மற்றும் வேளாண் இயந்திர விற்பனை யாளர்கள் நுண்ணீர் பாசனஅமைப்புகள் மற்றும் வேளாண் இயந்திரங்களை காட்சிப்படுத்தி மானிய திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# கிராம வேளாண் முன்னேற்றக்குழு கூட்டம்

சேலம், அக்.10

சேலம் மாவட்டம், வீரபாண்டி வட்டாரம் சேனைப்பாளையம் கிராமத்தில் செயல்படும் கிராம வேளாண் முன்னேற்ற குழுக் களுக்கு ராபி பருவ தொழில்நுட்பப்பயிற்சி நடத்தப்பட்டது.

வேளாண்மை அலுவலர் த.நிவேதாஶ்ரீ தலைமை தாங்கி ராபி பருவ பயிர்களான கம்பு, ராகி, உளுந்து, தட்டைப்பயறு, கொள்ளு ஆகிய பயிர்களின் புதிய சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி எடுத்து கூறினார்.

ஊராட்சி மன்ற தலைவர் பி.அழகேசன் முன்னிலை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் கே.ராஜேந்திரன்




அனைவரையும் வரவேற்று இப்பயிற்சியின் முக்கியத்தும் குறித்து எடுத்து கூறினார். தோட்டக்கலை அலுவலர் கே.கே.ஶ்ரீவிலாசினி ராபி பருவ பயிர்களான தக்காளி, வெண்டை, கத்தரி, மஞ்சள் சாகுபடி தொழில்நுட்பங்களை பற்றி எடுத்து கூறினார்.

கால்நடை உதவி மருத்துவர் கே.கதிரவன், கால்நடைகளுக்கு கோமாரி, அம்மை ஆகிய நோய்களுக்கு உரிய நேரத்தில் தடுப்பூசி போட்டு பயன் பெற கேட்டுகொண்டார். வனத்துறை வேளாண் அலுவலர் எஸ்.சந்திரசேகர், துறை மூலம் செயல்படுத்தும் மானிய திட்டங்கள் மற்றும் காட்டு விலங்குகள் மூலம் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை கட்டுபடுத்துவது குறித்து கூறினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

உதவி வேளாண்மை அலுவலர் த.பிரின்சி, வேளாண் விரிவாக்க மையங்களில் பணமில்லா பரிவர்த்தனை மூலம் இடுபொருட்கள் பெறும் வழிமுறைகள் குறித்து எடுத்து கூறினார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சி.சரஸ்வதி மற்றும் தீபன், முத்துசாமி ஆகியோர் பயிற்சி ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

